**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>E.P. No.17 of 2021 in O.S.No. 113 of 2006</u>**

**<u>நாள்.28.01.2026</u>**

**<u>ம.சா.1 – கருப்பசாமி</u>**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வேலுச்சாமி கோனார் அசல் வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை எப்போது பெற்றார் என்றால் தெரியாது. முதல் நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இறுதி நிலை தீர்ப்பாணைக்காக மனு எண்.1852/2010 மனுவை எனது தகப்பனார் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் 30.08.2013 தேதியில் வாய்தா ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் நான் ஒரு தரப்பினர் கிடையாது எனது தந்தை தான் தரப்பினர் என்றால் சரிதான். இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் 10.09.2013 தேதியில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். **<u>என்னிடம் காட்டப்படும் உத்தரவு இறுதிநிலை தீர்ப்பாணை உத்தரவு என்றால் சரிதான். சாட்சி இறுதிநிலை தீர்ப்பாணை உத்தரவின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ஆவணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** என்னிடம் காட்டப்படும் இறுதிநிலை தீர்ப்பாணை உத்தரவு எனது தந்தை உயிருடன் இருக்கும்போது பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2013 வருடம் 5 வது மாதம். நான் E.P.No.17/2021 மனுவில் எனது தந்தை எப்போது இறந்தார் என சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன் இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் E.P.No.17/2021 மனுவில் எனது தந்தை இறந்துவிட்டார் நான் தான் வாரிசு என அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பு எதுவும் எனது தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை 20.05.2013 ல் இறந்திருந்தால் நீதிமன்றம் இறுதிநிலை தீர்ப்பாணையில் உயிருடன் இருந்ததாக 10.09.2013 தேதியில் இறுதிநிலை தீர்ப்பாணை பெற்றிருக்க முடியாது என்றால் என் அப்பா 20.05.2013 ல் இறந்துவிட்டார் ஆனால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எனது தந்தை 20.05.2013 ல் இறந்திருந்தால் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் வாரிசாக சேர்ந்திருப்பேன் அவ்வாறு எனது தந்தை இறக்காததால் தான் நான் கட்சி சேரவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை 20.05.2013 ல் இறக்கவில்லை, 30.09.2013 க்கு பிறகு தான் இறந்தார் அந்த உண்மை விபரம் நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்பதால் நான் E.P.No.17/2021 மனுவில் எனது தந்தை எப்போது இறந்தார் என்ற விபரத்தை தெரிவிக்காமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது தரப்பு கட்சியின்படியே இறந்த நபருக்கு எதிராக பெறப்பட்ட எ.ம.சா.ஆ.1 உத்தரவின் அடிப்படையில் E.P.No.17/2021 மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கடையநல்லூர் தாலுகா, அச்சம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கொத்தாளம் குமாரர் செல்லத்துரை என்பவர் முன்னிலையில் வைத்து இறுதிநிலை தீர்ப்பாணை படியான முழுத்தொகையையும் எதிர்மனுதாரர் குருசாமி எனது தந்தைக்கு செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல செல்லத்துரை யார் என எனக்குத் தெரியாது. ம.சா.ஆ.1 இறப்புச் சான்றிதழ் யாரால் பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் அதில் இல்லை என்றால் சரியல்ல. எதிர் உரை தாக்கல் செய்யப்பட்ட பிறகு எங்களால் ம.சா.ஆ.1 இறப்புச் சான்றிதழ் மோசடியாக முன் தேதியிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறுதிநிலை தீர்ப்பாணை படியான முழுத்தொகையையும் எதிர்மனுதாரர் குருசாமி எனது தந்தைக்கு செலுத்திவிட்டார் அதனால் மனுதாரர்கள் எந்த தொகையையும் பெற தகுதியுடையவர்கள் அல்ல E.P.No.17/2021 மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் இறப்பு குறித்த தேதியை E.P.No.17/2021 மனுவில் தெரிவிக்காததாலும், எதிர்மனுதாரருக்கு முன் அறிவிப்பு அனுப்பாததாலும் தாக்கல் செய்த E.P.No.17/2021 மனு நிலைக்கத்தக்கதல்ல, நான் தூய கரத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.01.28 17:45:33 +0530